www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

# வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

# இரண்டாம் தவணைப்பரீட்சை - 2017

**தரம் - 6** **தமிழ்மொழியும் இலக்கியமும்** நேரம் : 2 மணித்தியாலம்

சுட்டெண் : புள்ளி

## பகுதி - I

**மிகப்பொருத்தமான விடையின் கீழ்க்கீறிடுக.**

01. அவன் ஏழை மக்களுக்கு அதிக வட்டிக்குப் பணம் கொடுத்தான். இங்கு ஏழை என்பதன் ஒத்தபதம்.
 1) பணக்காரன் 2) வறியவன் 3) உறவினன் 4) வள்ளல்

02. கண்ணகி கடுங்கோபம் கொண்டு மதுரையை எரித்தாள். இங்கு கோபம் என்பதன் எதிர்ச்சொல்.
 1) மூர்க்கம் 2) சீற்றம் 3) சாந்தம் 4) மகிழ்ச்சி

03. சிங்கத்தின் இளையது குருளை என்பது போல யானையின் இளையது.
 1) பேத்தை 2) குஞ்சு 3) மோதகம் 4) போதகம்

04. சிறுவன் கைகொட்டிச் சிரித்துக் கூச்சல் போட்டான். இங்கு சிறுவன் என்பதன் எதிர்ப்பாற்சொல்.
 1) சிறுமி 2) சிறுவி 3) சிறுகை 4) சின்னவன்

05. உடலுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியையும் பாதுகாப்பையும் வழங்கும் ஊட்டச்சத்துக்கள்.
 1) தாதுப்பொருட்கள் 2) கொழுப்புக்கள்
 3) புரதம் 4) காபோவைதரேற்று

06. பசு கதறும் என்பது போல எருது.
 1) கத்தும் 2) முக்காரமிடும் 3) உறுமும் 4) பிளிறும்

07. பின்வருவனவற்றுள் இடப்பெயர் அல்லாதது.
 1) இலங்கை 2) பாடசாலை 3) கண்டி 4) கதவு

08. “வரலாற்றுச் சிறப்புமிக்க பொருட்கள் மியூசியத்தில் (Museum) வைத்துப் பாதுகாக்கப்பட்டன. “ இங்கு மியூசியம் என்பது.
 1) புகலரண் 2) காவலரண்
 3) தொல்பொருள் திணைக்களம் 4) அருங்காட்சியகம்

09. தமிழ்மொழியிலுள்ள முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை.
 1) 30 2) 12 3) 18 4) 07

10. இன எழுத்துக்கள் அல்லாத எழுத்துத் தொகுதி.



agaram.lk

1) வல்லினமெய் 2) மெல்லினமெய் 3) இடையினமெய் 4) உயிர்க்குறில்

11. "லோ" என்னும் எழுத்திலுள்ள உயிர்எழுத்தும் மெய்யெழுத்தும்.
1) க் + ஆ 2) ச் + இ 3) ல் + இ 4) ல் + ஓ

12. ஓர் எழுவாயையும் ஒரு பயனிலையும் கொண்டு அமையும் வாக்கியம்.
1) தனிவாக்கியம் 2) வினா வாக்கியம் 3) கூட்டு வாக்கியம் 4) கலப்பு வாக்கியம்

13. தம்பி சோறு சாப்பிட்டான். இவ்வாக்கியத்திலுள்ள எழுவாய்.
1) சோறு 2) சாப்பிட்டான் 3) தம்பி 4) அவர்

14. நீங்கள் எங்கே போகிறீர்கள்? இதில் நீங்கள் என்பது.
1) தன்மை ஒருமை 2) முன்னிலைப்பன்மை
3) தன்மைப்பன்மை 4) படர்க்கை ஒருமை

15. ஐம்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா.
1) பவளவிழா 2) அமுதவிழா 3) பொன்விழா 4) வெள்ளிவிழா

16. நீதி தவறிய பாண்டிய மன்னனின் நெஞ்சம் "படபட" என அடித்தது. இதில் படபட என்பது.
1) இரட்டைக்கிளவி 2) இணைமொழி 3) அடுக்குத்தொடர் 4) அடுக்கிடுக்குத்தொடர்

17. மண், பாத்திரம், ஆபரணம், மரக்கலம் ஆகிய பல பொருட்களைக் குறிக்கும் ஒரு சொல்.
1) கணி 2) ஆணி 3) வலம் 4) கலம்

18. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரால் பாடப்பட்ட நீதி நூல்.
1) ஆத்திசூடி 2) புதியஆத்திசூடி 3) உலகநீதி 4) தொகைநூல்

19. ஆழமறியாது காலைவிடாதே என்ற பழமொழி உணர்த்துவது.
1) ஆபத்தைத் தடுக்க வேண்டும்
2) எதனையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.
3) சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.
4) யோசிக்காது செய்யவேண்டும்.

20. சொற்களைத் தனித்தனியாகவோ அடுக்கடுக்காகவோ பிரிக்கும் போது இடப்படும் குறியீடு.
1) வியப்புக்குறி 2) முற்றுப்புள்ளி 3) வினாக்குறி 4) காற்புள்ளி

(20 x 2 = 40 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

## பகுதி - II

**எல்லா வினாக்களுக்கும் விடைதருக.**

*01.* நீர் வகுப்பறையில் மேற்கொண்ட பேச்சுக் கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) பேச்சுக் கணிப்பீட்டிற்காக ஆசிரியரால் வழங்கப்பட்ட தலைப்பு யாது?
2) இக்கணிப்பீட்டிற்காக நீர் மேற்கொண்ட முன்னாயத்தங்கள் 2 தருக.
3) இக்கணிப்பீட்டிற்காக ஆசிரியரால் வழங்கப்பட்ட நியதிகள் 3 தருக.
4) இக்கணிப்பீட்டினை மேற்கொண்டதால் நீர் பெற்ற நன்மைகள் 03 தருக.

(2+2+3+3=10 புள்ளிகள்)

*02.* பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவுசெய்து நூற்றைம்பது (150) சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.

1) ஒழுக்கம் உயர்வு தரும்.
2) நான் விரும்பும் பெரியார்
3) மனதைக் கவர்ந்த மாலைக்காட்சி
4) செய்தித்தாள்களை வாசிப்பதனால் ஏற்படும் பயன்கள்.

(20 புள்ளிகள்)

*03.* தற்காலத்தில் துரித உணவுகளை உண்பதை விடுத்து இயற்கை உணவுகளை உண்பதன் அவசியத்தை வலியுறுத்தி உமது நண்பனுக்கு (75) எழுபத்தைந்து சொற்களில் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

*04.* எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) கோப்பெருந்தேவி கண்ட கனவினைக் குறிப்பிடுக?
2) செய்திகளைத் தெரிவிக்கும் ஊடகங்கள் 4 தருக.
3) சரிவிகித உணவு என்றால் என்ன?
4) மலேரியா காய்ச்சலின் வேறுபெயர்கள் இரண்டு தருக.
5) பந்தியில் தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள் இரண்டு தருக.

(2 x 5 = 10 புள்ளிகள்)

*05)* பின்வரும் செய்யுட்களில் இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களை இட்டு நிரப்புக.

1) செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்

.......................................... .......................................... ..........................................

...

2) எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண்

.......................................... .......................................... ..........................................

... 3) உடலினை ....................................................

4) குன்றென ....................................................

(2 + 2 + 2 = 06 புள்ளிகள்)

*06)* பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.

1) பானம் : 2) மரம் :

பாணம் : மறம் :

(04 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk